பாடம் 5

# நோவாவும் ஜலப்பிரளயமும் (ஆதி 6-9)

தேவன் பரிசுத்தர் மற்றும் பாவத்தை நியாயந்தீர்க்கிறார். நம்மை முழுமையாக மீட்பதற்கான கிருபையும், இரக்கமும் மிகுந்தவராயும் இருக்கிறார். முன்னுக்குப் பின் முரணான இந்த காரியம் எப்படி உண்மையாயிருக்க முடியும்? நம்முடைய கடந்த பாடத்திலே காயீனுடைய பாவத்திற்காக தேவன் அவனை நியாந்தீர்த்தார் என்று பார்த்தோம்.

இன்றைய பாடம் காயீனுக்கு பிறகு வந்த 10 வது தலைமுறையை சேர்ந்த நோவா என்கிற ஒருவரை நமக்கு அறிமுகப்படுத்துகிறது. நோவாவை பற்றிய பாடம், தேவன் பரிசுத்தமானவர், பாவிகளை தண்டிக்கிறவர் என்பதை மையமாகக் கொண்டது. ஆனாலும் ஜலப்பிரளயம் கூட ஒரு மீட்பின் பாடமாக இருக்கிறது. ஜலப்பிரளயம் வருவதற்கு முன்பாக ஆண்களும், பெண்களும் நூற்றுக்கணக்கான வருடம் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஆதாம் ஏவாளுடைய சந்ததியாரில் ஏறக்குறைய எல்லோரும் தேவனுக்குக் கீழ்ப்படியாதவர்களாய் மிகவும் துன்மார்க்கரானார்கள். அவர்களின் யோசனையும் செயல்களும் தீயனவைகளாகவே இருந்தது. அவர்கள் மனந்திரும்பாமல் தொடர்ந்து துன்மார்க்கராய் இருந்ததினாலே தேவன் மனமுடைந்தார்.

பூமியை இந்த துன்மார்க்கத்தனத்திலிருந்து சுத்திகரிக்க வேண்டும் என்று தீர்மானித்தார். இப்படியிருக்க ஒரே ஒரு மனிதன் மாத்திரம் விசுவாசத்தோடு வாழ்ந்து கொண்டிருந்தான். அவன் பெயர் நோவா. அவனுக்கு சேம்,காம்,யாபேத் என்று மூன்று மகன்கள் இருந்தார்கள். IIபேதுரு 2:5 -லே அப்போஸ்தலனாகிய பேதுரு 'நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா' என்று அவனை குறித்து எழுதுகிறார். தேவன் நோவாவைப் பார்த்து "நான் முழு உலகத்தையும் ஜலப்பிரளயத்தினால் அழிக்கப் போகிறேன். ஏனென்றால் மனிதர்கள் சீர்கெட்டவர்களாக கொடுமை நிறைந்தவர்களாக இருக்கிறார்கள். எது எப்படியென்றாலும் இந்தப் பூமியிலே உன் மூலமாக எல்லா உயிர்களையும் காப்பாற்ற எனக்கு ஒரு திட்டம் உள்ளது. நீ மிகவும் பெரிய ஒரு பேழையைக் கட்ட வேண்டும். அதை எப்படி கட்ட வேண்டும். எந்த அளவில் கட்ட வேண்டும் என்கிற எல்லா குறிப்புகளையும் நான் உனக்குத் தருவேன். நீ கட்டி முடித்த பின்பு பெருவெள்ளம் வந்து பூமியிலுள்ள மனுஷர்களையும், மிருகங்களையும் அழித்து விடும். நீயும் ,உன் குடும்பத்தாரும், உன்னோடு பேழைக்குள் நீ அழைத்துச் செல்லும் மிருகங்களும் பாதுகாக்கப்படும். உன்னோடு நான் என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன்'' என்றார்.

இன்னும் காணப்படாதவைகளைக் குறித்தும் தேவன் நோவாவுக்கு எச்சரிப்பு கொடுத்தார். (எபி 11:7) நோவா பாலைவனம் போன்ற, நீர் நிலைகள் எதுவும் இல்லாத இடத்திலே வாழ்ந்து கொண்டிருந்தான்.

இவ்வளவு பெரிய பேழையை மிதக்க வைக்கக் கூடிய போதுமான அளவு நீர் இல்லாததினால் அது கூடாத காரியமாய்க் காணப்பட்டது. ஆனால் நோவாவோ தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து, கொப்பேர் மரப்பலகைகளை சேகரித்து பேழையை கட்ட ஆரம்பித்தான். தேவன் தனக்கு கட்டளையிட்டபடியே அவன் எல்லாவற்றையும் செய்தான். அவன் பய பக்தியுடனே தன் குடும்பத்தாரை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டு பண்ணினான். அவன் தேவனுக்குக் கீழ்படிவதின் மூலம் தன்னுடைய விசுவாசத்தை வெளிப்படுத்தினான்.

பேழைக் கட்டி முடிந்தவுடனே தேவன் நோவாவிடம் "நீ உன் குடும்பத்துடன் பேழைக்குள் பிரவேசி. ஏழுநாள் சென்ற பின்பு பூமியின் மேல் ஜலப்பிரளயம் வந்து, உன்னோடு பேழையில் இருக்கிறவர்களைத் தவிர பூமியிலுள்ள எல்லா மனுஷரையும், மிருகங்களையும் அழித்து போடும்'' என்றார். நோவாவும் அவன் மனைவியும், அவனுடைய மூன்று குமாரர்களும் அவர்களுடைய மனைவிகளும் பேழைக்குள்ளாய் பிரவேசித்தார்கள். நோவாவுக்கு அப்பொழுது 600 வயது. அந்தக் குடும்பம் பேழைக்குள் சென்றவுடனே, மிருகங்களும், பறவைகளும் ஜோடி ஜோடியாக, ஆணும் பெண்ணுமாக பேழைக்குள் பிரவேசித்தன. அவைகள் சுத்தமான பறவைகளிலும் மிருகங்களிலும் ஏழு ஜோடிகளும், மற்றவைகள் ஒரு ஜோடியுமாய் இருந்தன. எல்லா பறவைகளும் மிருகங்களும் வந்து சேர்ந்தவுடனே தேவன் கதவை அடைத்தார்.

உடனே அந்த நாளிலே வானத்தின் மேலிருந்து ஜலம் பூமியின் மேல் விழத் தொடங்கியது. அதே நேரத்திலே பூமியின் ஊற்றுக் கண்களும் திறவுண்டது. நாற்பது நாட்கள் இரவும் பகலும் பூமியின் மேல் பெருமழை பெய்தது. பூமி முழுவதும் ஜலத்தினால் மூடப்பட்டது. எல்லா மனுஷர்களும் மிருகஜீவன்களும் மூழ்கி போனார்கள். இந்த வெள்ளம் மிக உயர்ந்த மலைகளையும் 23அடி ஆழத்திற்கு மூடியது. அதன் பிறகே மழை நின்றது. மனுஷருடைய பாவத்தினாலே தேவன் அவர்களை நியாந்தீர்த்தார். மனுக்குலத்தின் மிக மிஞ்சிய சீர்கெட்ட நடத்தையை அழிக்கும்படிக்கு இப்படி ஒரு சர்வநாசம் தேவைப்பட்டது. மனுக்குலத்திற்கு தேவனோடு மறுபடியும் உறவு கொள்ள ஒரு புதிய தருணமும் கொடுக்கப்பட்டது. நியாத்தீர்ப்புக்காக பயன்படுத்தப்பட்ட அதே ஜலம் நோவாவின் பேழையை அழிவிலிருந்து மேலே உயர்த்தியது. நோவாவின் குடும்பமும், பேழைக்குள் இருந்த மிருகங்களும், பறவைகளும் மட்டுமே காக்கப்பட்டன.

மழை நின்ற பிறகு 110 நாட்கள் வரைக்கும் நோவாவின் பேழை மிதந்து கொண்டிருந்தது. எவ்வளவு நாட்கள் வெள்ளம் இருக்கும் என்று தெரியாத சூழ்நிலையிலே அவனுடைய விசுவாசம் பரிசோதிக்கப்பட்டது. பின்பு தேவன் நோவாவை நினைத்தருளி, அவனுக்கும் அவன் குடும்பத்தாருக்கும் அன்பின் பராமரிப்பைக் கொடுத்தார். தேவன் பூமியின் மேல் காற்றை வீசப்பண்ணி நீரை வற்றச் செய்தார். ஆழத்தின் ஊற்றுக் கண்களை அடைத்துப் போட்டார்.கடைசியாக அந்தப் பேழை அராரத் மலையின் மேல் நின்றது. இன்றைய நவீன துருக்கி தேசத்தின் கிழக்குப் பகுதியிலே இந்த மலைகள் உள்ளன. நோவா இன்னும் நான்கு மாதங்கள் காத்திருந்து, ஜன்னலைத் திறந்து பூமியின் மேல் என்ன இருக்கிறது என்று பார்த்தான். செத்த பறவைகளையும், மிருகங்களையும் தின்கிற காகத்தை வெளியே விட்டான்.அது திரும்பி வரவே இல்லை.

நோவா இரண்டாவதாக ஒரு புறாவை வெளியே விட்டான். அது தன் அலகிலே ஒரு பச்சையான ஒலிவ இலையைக் கொத்திக் கொண்டு வந்தது. அதனால் நோவாவுக்கு இப்பொழுது பூமியிலே மரங்கள், செடிகள் முளைக்க ஆரம்பித்தது என தெரியவந்தது. ஒரு மாதத்திற்குப் பின் நோவா பேழையின் மேல் தட்டை திறந்து பார்த்தான். அப்பொழுது பூமி காய்ந்திருந்தது. உடனே தேவன் நோவாவைப் பார்த்து, "நீயும் உன் மனைவியும், உன் குமாரர்களும் அவர்கள் மனைவிகளும் பேழையை விட்டு வெளியே வரக்கடவர்கள். உன்னோடு பேழையில் உள்ள சகல ஜீவ ஜந்துக்களையும் வெளியே விடு. அவைகள் பூமியிலே பலுகிப் பெருகட்டும்" என்றார்.

அவர்கள் பேழையை விட்டு வெளியே வந்தவுடனே நோவா பலிபீடத்தைக் கட்டி சுத்தமான மிருகங்களை தேவனுக்கு தகன பலியிட்டான். தேவன் அந்தப் பலியை ஏற்றுக் கொண்டு "இனிநான் மனுஷன் நிமித்தம் ஒருபோதும் பூமியைச் சபிப்பதில்லை. மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயது தொடங்கி பொல்லாததாய் இருந்தாலும், ஜலப்பிரளயத்தினால் இனி ஒருபோதும் சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லை. இனி எப்போதும் பூமியில் விதைப்பும் அறுப்பும், குளிர்ச்சியும் உஷ்ணமும்,கோடைகாலமும் மாரிகாலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை" என்றார். (ஆதி 8: 21-22)தேவன் தந்த இந்த வாக்கை நினைவு கூறும்படி வானவில்லை மேகங்களில் வைத்தார். ஒவ்வொரு முறையும் நீங்கள் ஆகாயத்தில் வானவில்லைப் பார்க்கும் போதேல்லாம் தேவன் பூமியிலுள்ள எல்லா ஜீவன்களின் மேல் ஏற்படுத்தின நித்திய உடன்படிக்கையை நினைவு கூற வேண்டும்.

தேவனுடைய பரிசுத்தத்தை காண்பிக்கிறதினால் இந்தப்பாடம் முக்கியமானது. ஏனென்றால் அது நியாயத் தீர்ப்பையும், மீட்கும் கிருபையையும் நமக்கு வெளிப்படுத்துகிறது. அழிவிலிருந்து நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ள முடியாது. தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து கீழ்ப்படிவதினால் மாத்திரமே நம்மை காப்பாற்றி கொள்ள முடியும். தேவன் பரிசுத்தர் என்பதை இந்தப் பாடம் சொல்லிக் கொடுக்கிறது. தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை நம்பி, செவி சாய்க்காமல் இருக்கிற எல்லாப் பாவிகளையும் அவர் நியாயந்தீர்ப்பார். அவரை நம்புகிறவர்கள் தேவ இரக்கத்தைப் பெற்றுக் கொள்வார்கள்.

இந்தப் பாடத்தை திரும்பி பார்க்க பின்வரும் கேள்விகளுக்கு பதில் அளியுங்கள்.

1. பேழை கட்டி முடிக்கப்பட்டவுடன் மழை வருவதற்கு முன்பாக தேவன் எதை எதை நோவா குடும்பத்தினரிடம் அனுப்பி வைத்தார்? (6 வினாடிகள் தாமதிக்கவும்)

மிருகங்களும், பறவைகளும் ஜோடி ஜோடியாகஆணும் பெண்ணுமாக வந்தன என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

2. நோவா பேழையிலிருந்து வெளியே வந்தவுடன் செய்த முதல் காரியம் என்ன?(6 வினாடிகள் தாமதிக்கவும்)
   நோவா பலிபீடத்தைக் கட்டி குடும்பத்தோடு தேவனை தொழுது கொண்டான். என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.
3. நோவாவும் அவன் குடும்பத்தாரும் கர்த்தரை தொழுது கொண்ட பிறகு அவர்களுக்கு அவர் தந்த வாக்குத்தத்தம் என்ன?(6 வினாடிகள் தாமதிக்கவும்)
   ‘இனி ஒருபோதும் பூமியை ஜலப்பிரளயத்தினால் அழிக்க மாட்டேன்’’ என கூறினார் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்

மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகளில் அவன் சிறு வயது தொடங்கி பொல்லாதவைகளெல்லாம் இருக்கிறது. நாமெல்லாரும் நியாயத்தீர்ப்பை அடைய வேண்டியவர்கள், தேவன் கொடுக்கிற கிருபையை பெற்றுக் கொள்ள வேண்டியவர்கள். இந்த சத்தியத்தைதான் ஜனங்கள் அறிந்துகொள்ளவேண்டும். மற்றவர்களுக்கு நீங்கள் இந்தச் செய்திகளை எப்படி சொல்வீர்கள் என்று யோசித்து பாருங்கள்.

இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால், குறைந்தது மூன்று முறையாவது இந்த பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்தக் பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடந்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள். பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள். நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள். கடைசியாக இதைப் பற்றி கேட்டிராத ஒரு நண்பருக்கு இந்த பாடத்தை சொல்லுங்கள். இதைச் சொன்ன பிறகு உங்கள் நண்பருக்கும், தேவனுக்கும் உள்ள உறவைப் பற்றி கேளுங்கள். அவர்களோடு சேர்ந்து ஜெபியுங்கள்.

கடைசியாக, இந்த பாடத்தைப் பற்றி அறியாத ஒரு நண்பருக்கு இதை கற்றுக் கொடுக்கவும். மேலும் ஆதியாகமத்தின் சில அதிகாரங்களிலுள்ள தேவனுடைய மூன்று நீயாத்தீர்ப்புகளை பற்றியும் சொல்லவும். இதன் மூலம் ஆதாம், ஏவாள், காயீன் மற்றும் உலகத்தின் கீழ்படியாமல் போன மக்களுக்கு தேவன் அளித்த நியாத்தீர்ப்பை குறித்து கற்றுக் கொள்கிறோம். கடைசி நாட்களிலே தேவன் பூமியை நியாயந் தீர்க்கும் நேரத்திற்கு நீங்கள் ஆயத்தமாய் இருக்கிறீர்களா? என்று கேட்கவும். அவர்கள் இல்லை என்று கூறும்போது, தேவனை விசுவாசித்து அவரிடமிருந்து கிருபையையும், இரக்கத்தையும் எப்படி பெற்றுக்கொள்வது என்பதை பகிர்ந்துகொள்வோம்.

பாடம் முடிந்தது